Click Here to Learn more: https://bit.ly/3wH0tud

# தமிழகப் பண்பாடு

'பண்படு' என்ற வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியது 'பண்பாடு' என்ற சொல்லாகும். பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் **டி.கே. சிதம்பரநாதனார்.**

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்ற தொல்காப்பிய சொற்றொடரில் 'உயர்ந்தோர்' என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று **கலித்தொகை** குறிப்பிடுகிறது. 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்ற சொற்றொடரின் மூலமாக பண்புடையவர்களால் மட்டுமே இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று **வள்ளுவர்** கூறியுள்ளார்.

| பண்பாடு (Culture) | நாகரிகம் (Civilization) |
|---|---|
| பண்பாடு என்பது, மாந்தனது அகவுணர்வின் வளர்ச்சியையும் சீர்மையையும் குறிக்கிறது. | நாகரிகம் என்பது, மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிக்கிறது. |
| (எ.கா) அன்பு, அருள், ஈகை, இரக்கம், ஊக்கம், வீரம், மானம், பற்று, பிறர் நலம் பேணுதல் போன்றவை. | (எ.கா) உணவு, உடை, உறையுள், கலைகள் – கூத்து, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம், விளையாட்டு, கட்டடம், வணிகம், நகர நிர்மாணம் போன்றவை. |

### தமிழர்களின் தோற்றம் பற்றிய கருதுகோள்

1. தமிழர் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தவர்கள்.
2. தென்னிந்தியாவின் பழங்குடிகள்.
3. ஆதியில் ஆப்பிரிக்காவிலிருந்து தென்னிந்தியா வந்தோரின் வழித்தோன்றல்கள்.
4. மத்திய ஆசியா, வடஇந்தியா ஆகிய நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென்னிந்தியா வந்தனர்.

### தமிழகப் பண்பாட்டின் தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள்

### இலக்கியச் சான்றுகள்

**தொல்காப்பியம்** மற்றும் **சங்க இலக்கியங்கள்** ஆகியவை தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறிந்து கொள்ள உதவும் முக்கியச் சான்றுகளாகும்.

தொல்காப்பிய பொருளதிகாரம் பழந்தமிழரின் **அக, புற வாழ்க்கை முறைகளைக்** கூறுகிறது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பழந்தமிழரின் **சமூக, பொருளாதார** வாழ்க்கையைக் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களில் அக வாழ்க்கை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என 'அன்பின் ஐந்திணையாகப்' பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **முதற்பொருள்** | நிலம், பொழுது |
| **கருப்பொருள்** | வழிபடுமுறை, தொழில், வாழ்க்கைமுறை, விளையும் பொருள்கள் |
| **உரிப்பொருள்** | காதல் வாழ்வு ; அதன் வழியாகத் தோன்றும் பல்வேறு உணர்வுகள் |

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய தத்துவத்தை சங்ககாலப் புலவர் **கணியன் பூங்குன்றனார்** கூறியுள்ளார்.

**பதிற்றுப்பத்தில்** சேரமன்னர்களின் ஆட்சி சிறப்பு, போர்த்திறம், கொடை, வணிகம் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இசைநூலான **பரிபாடல்** பாண்டிய மன்னர்களின் தலைநகரமான மதுரையின் சிறப்பு, வைகை ஆற்றின் சிறப்பு, திருமால், முருகன் ஆகியோரை வழிபட்ட முறை ஆகியவற்றைக் கூறுகிறது.

### பத்துப்பாட்டு

பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும்.

### ஆற்றுப்படை – விளக்கம்

மன்னரிடமோ, வள்ளல்களிடமோ பரிசு பெற்று வந்த புலவர்கள், பாணர்கள், கூத்தர், விறலியோர் போன்றோர் தம்மைப் போன்று வறுமையில் வாடும் மற்றவரை அவர்களிடம் சென்று பரிசில் பெற வேண்டிய வழிமுறைகளைக் கூறுவது ஆற்றுப்படுத்துவது ஆகும்.

***'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்'***
***ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்***
***பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்***
***சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"***

**– தொல். பொருள். புறத்திணை இயல்**

என்று தொல்காப்பியம் ஆற்றுப்படை நூல்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

**ஆற்றுப்படை நூல்கள் :** திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்).

**குறிஞ்சிப்பாட்டும், முல்லைப்பாட்டும்** நிலவளம், காதலின் சிறப்புப் பற்றிக் கூறுகின்றன.

**நெடுநல்வாடை** காதல் மற்றும் வீரம் இரண்டையும் கூறுகிறது.

**மதுரைக்காஞ்சி** பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் சிறப்பையும் நிலையாமை குறித்த கருத்துகளையும் கூறுகிறது.

**பட்டினப்பாலை** சோழவளநாடு தரைவழி வணிகத்திலும் கடல் வழி வணிகத்திலும் வளம் பெற்றிருந்ததைக் கூறுகிறது. இதனை 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' என்ற சொற்றொடர் குறிப்பிட்டுச் சொல்கிறது.

### சிலப்பதிகாரம்

தமிழர் ஆட்சிமுறை, ஆடல், பாடல், கலைவளம் மற்றும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களின் சிறப்புகள் வணிக வளம், சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், தனிமனித ஒழுக்கம், நீதி வழங்கும் முறைமை பற்றி விரிவாகப் பேசும் ஆவணமாக சிலப்பதிகாரம் விளங்குகிறது.

### மணிமேகலை :

சமய அறக் கருத்துகள், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறது. அடிப்படைக் காரணங்களை ஆராய்வதின் மூலமே குற்றச் செயல்களைத் தடுக்க முடியும் என்பது இந்நூலின் மையக் கருத்தாகும். பசியைப் பிணியாக (நோயாக) உருவகம் செய்து, அதனைத் தீர்க்க வேண்டிய அவசியத்தினையும் கூறுகிற புரட்சிக் காப்பியமாகும்.

### வெளிநாட்டினரின் குறிப்புகள் :

**எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ் :**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூலின் பதிப்புரையில், கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும் பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது.

சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்கும் இடையில் அமைந்திருந்தன என்றும் அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் நிறைந்திருந்தன என்றும் இந்நூல் கூறுகிறது.

**பண்டைய தமிழகத்தின் கடல் வணிகம் பற்றி கூறும் நூல்கள்**

1. ரோமாபுரி அரசன் அகஸ்டஸின் சமகாலத்தவரான **ஸ்டிராபோ** (strabo) என்பவர் எழுதிய பூகோள நூல்.
2. **பிளினி** எழுதிய உயிரியல் நூல்.
3. **தாலமி** எழுதிய பூகோளநூல்

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிரேக்கர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர்.



Click Here to Learn more: https://bit.ly/3wH0tud

Click Here to Learn more: https://bit.ly/3wH0tud



**அதற்கான ஆதாரங்கள்**

| தமிழ்ச் சொல் | கிரேக்கச் சொல் |
|---|---|
| அரிசி | அரிஸா |
| கருவா (இலவங்கம்) | கார்ப்பியன் |
| இஞ்சிவேர் | சின்ஞிபேராஸ் |
| பிப்பாலி | பெர்பெரி |

சாலமன் மன்னனுக்கு அளிக்கப் பெற்ற **'துகிம்'** (மயில்தோகை), **ஆல்மக்** (அகில் மரங்கள்) போன்ற மதிப்புமிக்க பொருள்களின் பெயர்கள் தமிழ்ச் சொற்களிலிருந்து உருமாறியவை.

அயல்நாடுகளுக்குப் புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டை நாய்கள் ஆகியவற்றை தமிழகம் ஏற்றுமதி செய்தது. தமிழகத்து வேட்டை நாய்கள் தரத்தில் மேலானவை என்று போற்றப்பட்டன. தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாயின.

சேரநாட்டு துறைமுகப் பட்டினங்களான தொண்டியை **'திண்டிஸ்'** என்றும் முசிறியை **'முஸிரிஸ்'** என்றும் பொற்காட்டைப் **'பகரி'** என்றும், குமரியை **'கொமாரி'** என்றும் ரோமர்கள் குறிப்பிட்டனர்.

தமிழகத்தின் கீழைக் கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையை **'கொல்சாய்'** என்றும், நாகப்பட்டினத்தை **'நிகாமா'** என்றும், காவிரிப்பூம்பட்டினத்தைக் **'கமரா'** என்றும், புதுச்சேரியைப் **'பொதுகே'** என்றும், மரக்காணத்தை **'மசோலியா'** என்றும் வெளிநாட்டினரின் நூல்கள் குறிப்பிடுகின்றன.

கி.மு. 5–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற மருத்துவரான **ஹிப்போகிரேட்டஸ்** இந்திய மருத்துவ முறைகளையும் மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். இவர் மிளகை **'இந்திய மருந்து'** என்று குறிப்பிட்டார். பண்டைய தமிழகத்திலிருந்து மஸ்லின் துணி, ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாயின.

## தொல்பொருள் சான்றுகள்

### கல்வெட்டுகளும் பட்டயங்களும்

திருப்பரங்குன்றம், நாகமலை, ஆனைமலை, கீழக்குயில்குடி ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் **சங்க காலத்தவையாகும்.**

மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, திருச்சி, பல்லாவரம், மாமல்லபுரம், தளவானூர் போன்ற இடங்களிலுள்ள குகைகள், ரதங்கள், கோயில்கள், கற்பாறைகள், தூண்கள் ஆகியவற்றில் **பல்லவர்கால** கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. **காஞ்சி கோயில்களில்** காணப்படும் கல்வெட்டுகளில் பல்லவர் கால வரலாற்றை அறியமுடிகிறது.

பராந்தகச் சோழனின் **உத்திரமேரூர்க் கல்வெட்டு,** சோழர்கால கிராம ஆட்சிமுறையைத் தெளிவாகக் கூறுகிறது. இக்கல்வெட்டில் **குடவோலை முறை** குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் பண்பாடு, அரசியல், நீதி, சமூக உறவு, வாழ்க்கை முறை, பொருளாதாரநிலை போன்றவை தஞ்சை, திருவொற்றியூர், மேலப்பழுவூர், சிதம்பரம், திருவாரூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

> **குடவோலை முறை :** கிராம ஊராட்சி சபை உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட முறையே குடவோலை தேர்தல் முறையாகும். இத்தேர்தலில் குற்றமற்றோர் மற்றும் தகுதியுள்ளோரின் பெயர்களை ஓலையில் எழுதி குடத்திலிட்டு ஒரு சிறுபிள்ளையைக் கொண்டு ஓர் ஓலையை எடுக்கச் சொல்வார்கள். அதில் வரும் பெயருடைய நபரையே தேர்ந்தெடுப்பார்கள்.

பொன், செம்பு ஆகிய உலோகத்தகடுகள் மீது பொறிக்கப்படும் ஆவணங்கள் **'பட்டயங்கள்'** எனப்பட்டன.

பட்டயங்களில் அரசனின் பெயர், காலம், பட்டயம் நோக்கம் பற்றி பொறிக்கப்பட்டிருப்பதால் அக்கால ஆட்சிமுறை பற்றி அறிய முடிகிறது.

**பட்டயத்திலிருந்த மொழிகள் :** தமிழ், பிராகிருதம், வடமொழி.

**பாண்டியர் காலப் பட்டயங்கள் :** வேள்விக்குடிப்பட்டயம், தளவாய்ப்புரச் செப்பேடு, சின்னமனூர்ச் சாசனம், சிவகாசி செப்பேடுகள்.

**சோழர்காலப் பட்டயங்கள் :** திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தைச் செப்பேடுகள், அன்பில் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள்.

மன்னர்கள் கொடையாக வழங்கிய இறையிலி நிலங்களையும், அவைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் பற்றியும் இவை கூறுகின்றன.

### நாணயங்கள்

**சங்ககாலம் :** சதுர வடிவிலான செப்பு நாணயத்தின் ஒருபுறத்தில் யானையும் மறுபுறத்தில் இரட்டை மீன்களும் காணப்பட்டன.

**பல்லவர்கால நாணயம் :** இரட்டை மீன், கப்பல், நந்தி போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

**முதலாம் இராஜராஜ சோழன் காலத்து நாணயங்கள்**

இவற்றில் புலியும் அதனருகில் இரட்டை மீன் கொண்ட வடிவங்களும் காணப்படுகின்றன. இதன் மூலம் முதலாம் இராஜராஜன் பாண்டியர்களை அடக்கி வலிமை பெற்றவனாக வாழ்ந்தான் என்பது தெளிவாகிறது.

**இரண்டாம் வரகுணப் பாண்டியன் காலத்து நாணயங்கள்**

இவற்றில் கிரந்த எழுத்துகளில் அவனுடைய பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது.

யவனர்கள் தமிழகத்தில் மதுரை, புகார் ஆகிய இடங்களிலிருந்து தங்க நாணயங்களை வெளியிட்டனர்.

### நினைவுச் சின்னங்கள்

சங்ககாலத்திலும் களப்பிரர் காலத்திலும் அழியக் கூடிய பொருள்களான மரம், செங்கல், மண், சுண்ணாம்பு கொண்டு பல கோயில்கள் கட்டப்பட்டன.

பல்லவர் காலம் முதல் கற்கள் கொண்டு கட்டப்பட்ட கோயில்கள் இன்றுவரை நிலைத்து நிற்கின்றன.

கோயில், அரண்மனைகள், கோட்டைகள் போன்றவை பண்டைய தமிழ்ப் பண்பாட்டை அறிய உதவுகின்றன. (எ.கா) வேலூர் கோட்டை, கண்டி அரசன் ராசசிங்கன் கோட்டை, சமணர்கள் வாழ்ந்த குகைகள், மாமல்லபுரம் சிற்பங்கள், சித்தனவாசல் குகைக் கோயில்கள் போன்றவை.

வீரம், கொடை, புலமை முதலியவற்றில் சிறந்தவர்களை நினைவுகூரும் பொருட்டு நடப்பட்ட **கற்பதுகைகள்** நடுகற்கள் மற்றும் இறந்தவர்களை புதைப்பதற்குப் பயன்பட்ட முதுமக்கள் தாழிகள்.

### நிலவியல் கூறுகள்

| | |
|---|---|
| குறிஞ்சி நிலம் | மலையும் மலைசார்ந்த பகுதிகளும் |
| முல்லை நிலம் | காடும் காடுசார்ந்த பகுதிகளும் |
| மருத நிலம் | வயலும் வயல்சார்ந்த பகுதிகளும் |
| நெய்தல் நிலம் | கடலும் கடல்சார்ந்த பகுதிகளும் |
| பாலை நிலம் | குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலம் |

மேற்கண்ட ஐவகைப் பிரிவுகள் பழந்தமிழர் ஒன்றுபட்டு வாழாமல் தனித்தனியே வாழ்வதற்குக் காரணமாய் அமைந்தன. பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, கொங்குநாடு, தொண்டை நாடு போன்ற அரசியல் பிரிவுகளுக்கு இந்த இயற்கை அமைப்பே காரணமாக இருந்தது.

இவையன்றிக் குறுநில மன்னர்களின் அரசுகளும் தனியரசுகளாகவே இயங்கி வந்தன.

### மாண்புகள்

**மன்னர்களுக்கு உரிய மாண்புகள்**

நெறிபிறழாத போர்முறை, மக்கள் நிலையறிந்து வரி விதித்தல், நேர்மையாகப் பொருளீட்டல், சான்றோர்களை மதித்தல், அவர்தம் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுதல்.

**குடிமக்களுக்கு உரிய மாண்புகள்**

'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற குறுந்தொகைப் பாடல் ஆண்கள் தங்களின் வாழ்விடங்களுக்கு ஏற்ற தொழில்களைச் செய்தனர் என்பதை அறிய முடிகிறது.



Click Here to Learn more: https://bit.ly/3wH0tud

Click Here to Learn more: https://bit.ly/3wH0tud



கற்பொழுக்கம், மக்கட்பேறு, விருந்தோம்பல், பெரியோரை மதித்தல் முதலியன பெண்களுக்கு உரிய மாண்பாகக் கருதப்பட்டன.

**முச்சங்கங்கள்**

பாண்டிய மன்னர்களால் தமிழை வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டதே தமிழ்ச் சங்கங்கள் ஆகும். கால அடிப்படையில் இவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

முச்சங்கங்கள்

| முதற்சங்கம் | இடைச்சங்கம் | கடைச்சங்கம் |
|---|---|---|
| தென்மதுரை | கபாடபுரம் | இன்றைய மதுரை |
| **வளர்த்தவர்கள்** காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை | **வளர்த்தவர்கள்** வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை | **வளர்த்தவர்கள்** முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை |

சங்ககாலத்திற்குப் பின் சமணசமயத் துறவிகள் சங்கம் ஏற்படுத்தி கல்வித்தொண்டும், சமயத்தொண்டும் புரிந்தார்கள்.

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூன்றாம் சங்ககால நூல்கள் எனக் கூறுகின்றனர்.

மதுரையில் புலவர்கள் கூடித் தமிழை ஆய்ந்து வந்ததற்கும், பாண்டிய மன்னர்கள் அவர்களுக்கு ஆதரவு அளித்ததற்குமான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

சேர, சோழ மன்னர்கள் மற்றும் குறுநில மன்னர்களும் புலவர்களை ஆதரித்து வந்தனர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சங்கங்கள் பற்றிய வரலாறு நக்கீரர் எழுதிய **இறையனார் களவியலுரையில்** கூறப்பட்டுள்ளது.

### அகத்திணை - புறத்திணை

தமிழர்கள் தம் வாழ்க்கையை அன்பின் வழிபட்டது **'அகவாழ்வு'** என்றும் வீரத்தின் வெளிப்பாடு **'புறவாழ்வு'** என்றும் பிரித்திருந்தனர்.

**அகத்திணை – விளக்கம்**

தலைவனும் தலைவியும் தாம் துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த இயலாததே அகவாழ்வு ஆகும். இது ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகும். பொருந்தாக் காதல் **'பெருந்திணை'** எனவும், ஒருதலைக் காதல் **'கைக்கிளை'** எனவும் கூறப்பட்டது. அகத்திணை மற்றும் புறத்திணை சார்ந்த செய்திகளை தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் விரிவாகக் கூறுகிறது.

| திணை | பொழுது | | உரிப்பொருள் |
|---|---|---|---|
| | சிறுபொழுது | பெரும்பொழுது | |
| குறிஞ்சி | யாமம் | கூதிர், முன்பனி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | மாலை | கார் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | ஊடலும், ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | எற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | நண்பகல் | இளவேனில், முதுவேனில் பின்பனி | பிரிதலும், பிரிதல் நிமித்தமும் |

**புறத்திணை – விளக்கம்**

புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை ஆகும். தொல்காப்பியம் புறத்திணைகள் ஏழு எனப் பகுத்துள்ளது. புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுத் திணைகள் போருக்கான காரணங்களைக் கூறுகின்றன. பாடாண் திணை மன்னனின் வீரம், கொடை, புகழ், முதலானவற்றை கூறுகிறது.

மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதவை 'பொதுவியல்' திணையில் கூறப்பட்டுள்ளன.

**விருந்தோம்பல்**

பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு தமிழர்களையே சாரும்.

***"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"***
– தொல். பொருளதிகாரம்.

விருந்து என்ற சொல்லிற்கு இங்கு **'புதியது'** எனப்பொருளாகும். இதிலிருந்தே முன்பின் அறியாத புதியவர்களை விருந்தினர் என அழைக்கும் பழக்கம் தோன்றியிருக்க வேண்டும்.

***"விருந்து புறத்தாத் தானுஉண்டல் சாவா***
***மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"*** – திருக்குறள்

'தொல்லோர் சிறப்பின்' என்ற சிலப்பதிகாரம் சொற்றொடர் மூலம் விருந்தோம்பல் தமிழரின் தொன்மையான பழக்கம் என்பதை அறிய முடிகிறது.

இரவில் வீட்டின் கதவை அடைக்கும் முன்பு விருந்தினர் யாரேனும் வெளியில் உள்ளனரா என்று பார்ப்பது தமிழர்களின் பழக்கம் என நற்றிணை கூறுகிறது.

***.................. கோவலர்***
***மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளிச்***
***செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்***
***புல்லி நன்னாட்டு*** – அகநானூறு 311

புல்லி அரசன் நாட்டு மக்கள் வழியில் வரும் புதியவர்களை எல்லாம் விருந்தோம்பிக் காப்பாற்றுபவர். காளை மாட்டை மேய்க்கச் செல்லும் கோவலர்கள், காளை மாட்டின் கழுத்தில் மாட்டி வைத்துள்ள மூங்கில் குழாயிலுள்ள புளிச்சோற்றை தேக்கிலையில் பங்கிட்டுக் கொடுத்து புதியவர்களின் பசியைத் தீர்ப்பார்கள்.

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை **'மடைநூல்'** குறிப்பிடுகிறது. உணவு பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன.

**வள்ளன்மை**

பெற்ற பெருவளத்தைத் தக்கோர்க்கு பகிர்ந்தளிப்பதே வள்ளன்மையாகும். சேர, சோழ பாண்டிய மன்னர்களும் குறுநிலமன்னர்களும் வள்ளல்தன்மை கொண்டவர்களாக விளங்கினர்.

**கடையெழு வள்ளல்கள்**

| குறுநில மன்னர்கள் | ஆட்சி செய்த பகுதி | வள்ளல் தன்மை |
|---|---|---|
| பேகன் | பழனி மலை | மயிலுக்குப் போர்வை தந்தவர். |
| பாரி | பறம்பு மலை | முல்லைக்கொடி படர தேர் தந்தவர். |
| திருமுடிக்காரி | மலையமா நாடு | இரவலர்க்கு குதிரைகளைப் பரிசாக வழங்கியவர். |
| ஆய் அண்டிரன் | பொதியமலை | நீலநாக உடையை இறைவனுக்குப் போர்த்தி மகிழ்ந்தவர். |
| அதியமான் | தகடூர் | அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவர். |
| நள்ளி | கண்டீர மலை (உதகை) | மலைவாழ் மக்களுக்கு அனைத்துப் பொருளையும் வழங்கியவர். |
| வல்வில் ஓரி | கொல்லி மலை | யாழ் மீட்டும் பாணர்களுக்கு நாட்டையே பரிசாக வழங்கியவர். |



Click Here to Learn more: https://bit.ly/3wH0tud

Click Here to Learn more: https://bit.ly/3wH0tud



### இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடை

**மொழிக்கொடை**

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்துள்ளார்கள். வடமொழிகள் பலவற்றிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன.

கடல்கடந்த நாடுகளிலும் இந்திய நாகரிகத்தோடு பரவியுள்ள மொழி தமிழ் மொழியாகும். சமஸ்கிருதத்திலும் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன.

**திருக்கோயில்கள்**

திருக்கோயில்கள் பழங்காலத்தில் பண்பாட்டு மையங்களாகவும் கலைக்கூடங்களாகவும் திகழ்ந்தன. கோயில்களில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலைகள் நிறைந்துள்ளன. இவையனைத்தும் தமிழகம் இந்தியாவிற்கு வழங்கிய நன்கொடையாகும். தமிழகக் கோயில் அமைப்புகளில் வட இந்தியாவில் பலகோயில்கள் அமைந்துள்ளன.

**நாட்டியம்**

"கை வழிக் கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே" ஆடலின் நுட்பமாகும். ஆடவல்ல நடன மகள் '**விறலி**' எனப்பட்டாள். நடன மகன் '**கூத்தன்**' எனப்பட்டான். வள்ளிக் கூத்து, முருகனை வழிப்பட்டு ஆடும் **குன்றக்குரவை** ; திருமாலை வழிபட்டு ஆடும் **ஆய்ச்சியர் குரவை**, துணங்கைக் கூத்து, குணலைக் கூத்து போன்றவை இலக்கியங்களில் காணப்படுகின்றன. சிவன் ஆடும் கூத்து **தாண்டவம்** எனப்படுகிறது. சைவர்கள் சிவனை ஆடும் கடவுளாக அம்பலக் கூத்தனாக, ஆடல் வல்லானாக, நடராசனாகப் போற்றி வணங்கினர். வைணவர்கள் திருமாலை குழல் ஊதி கோபியருடன் ஆடும் கண்ணனாகப் போற்றினர். இந்தியப் பெருநாட்டிற்கு தமிழகப் பரதக்கலை ஒரு சிறந்த கொடையாகும்.

**ஹஸ்தம்**

பரத நாட்டியத்தில் கை அசைவுகள் 'ஹஸ்தம்' எனப்படுகிறது. 'கை' என்பதன் தமிழ்ச் சொல் ஹஸ்தம் ஆகும். இதனைத் தமிழில் 'முத்திரை' என்பர். பரத நாட்டியத்தில் அடவு, அபிநயம் இரண்டிற்கும் முக்கியமானது முத்திரைகளாகும்.

**விழாக்கள்**

உழவுத் தொழிலுக்கு உதவி செய்த சூரியனுக்கும் மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழகத்தில் கொண்டாடும் பொங்கல் விழா வட இந்தியாவில் மகர சங்கராந்தியாகக் கொண்டாடப்படுகிறது. வசந்தகாலத்தில் இந்திரவிழா கொண்டாடப்பட்டது.

**பிறகொடைகள்**

**திருக்குறள் :** உலகப் பொதுமறையான திருக்குறள் தமிழர்களின் கொடையாகும்.

**மருத்துவம் :** சித்த மருத்துவம் எனப்படும் மூலிகை மருத்துவத்தை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்கள்.

**இசை :** தமிழர்கள் பண்பட்ட உணர்விற்கு எடுத்துக்காட்டான இசை, தமிழர்கள் வழங்கிய கொடையாகும்.

**கப்பல் கட்டுமானம் :** பன்னெடுங்காலத்திற்கு முன்பே கப்பல் கட்டும் நுட்பத்தை அறிந்திருந்தவர்கள் தமிழர்கள்.

**மண்டபங்கள்:** நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், இசைத்தூண்கள் போன்றவை தமிழர்களின் கொடையாகும்.

# தொல்லியல் ஆய்வுகள்

தொன்மைக் காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல் பொருளியல் என்கிறோம்.

தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, தொழில்கள், வணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் பற்றி அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தறிந்து கொள்ளுதலே தொல்லியலின் முதன்மையான நோக்கமாகும்.

அகழாய்வினை பூமியில் மட்டுமின்றிக் குகைகளினுள்ளும் நீருக்கடியிலும் செய்யலாம்.

நீருக்கடியில் அகழாய்வு செய்வதன் மூலம் இயற்கைச் சீற்றங்களினால் முற்காலத்தில் நீரினுள் மறைந்த நகரங்களையும் துறைமுகங்களையும் பற்றிய அரிய பல செய்திகளை வெளிக் கொணர முடியும்.

பொருள்களுடன் தாழியிலிட்டு புதைக்கும் வழக்கத்தை தடயங்கள் மூலம் கண்டறிய முடிகிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

அவைகளில் இருந்து, கி.மு. 300 முதல் கி.பி. 300 வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த மக்கள், இறந்தோரின் உடலுடன் தங்கத்தினாலான ஆபரணங்கள், செம்பினாலான ஆண், பெண் தெய்வ உருவங்கள், இரும்பினாலான கத்திகள், விளக்குத் தாங்கிகள் போன்றவற்றையும் சேர்த்து புதைத்தது தெரிய வருகிறது.

1963–ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் துறை பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி என்ற இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின் போது கி.மு. 3–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன.

இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத்துறை, நீர்த்தேக்கம், புத்தவிஹாரம், வெண்கலத்தாலான புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன.

இவை பண்டைய காவிரிப்பூம்பட்டின மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என்பதும் காவிரிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது என்பதற்குமான சான்றுகள் ஆகும்.

காவிரிப்பூம்பட்டின அகழாய்வில் கண்டறிந்த தடயங்களான புத்தர் சிலை, தூண் போன்றவற்றிலிருந்து அங்கு வாழ்ந்த மக்களில் சிலர் புத்தசமயத்தைப் பின்பற்றியுள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

படகுத்துறை கட்டப்பட்டுள்ளதை நோக்கும் போது அவ்வூர் மக்கள் கடல் வாணிபம் செய்து வந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

தருமபுரி, கரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலக்கட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களினால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இவற்றில் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகள் மூலம் இவைகள் எந்த மன்னர் காலத்திய காசுகள் என்று கண்டறிய முடிகிறது.

இக்காசுகளில் சூரியன், மலைமுகடு, ஆறு, காளை, ஸ்வஸ்திகம், கும்பம் போன்ற சின்னங்கள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

### சிதம்பரம் பகுதியில் 1,300 ஆண்டுகளுக்கு முன் சுனாமி தாக்குதல்

சிதம்பரம் தாலுகாவில் உள்ள விளாகம் பகுதியில், 13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கேணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



Click Here to Learn more: https://bit.ly/3wH0tud

Click Here to Learn more: https://bit.ly/3wH0tud



கேணியை சுற்றி அமைந்துள்ள, கடல் மண்ணை ஆய்வு செய்த போது, 1,300 ஆண்டுகளுக்கு முன் அப்பகுதியில் சுனாமி தாக்கியது தெரிய வந்துள்ளது.

### ஆய்வாளர்களின் கூற்று

கேணியின், செங்கற்களின் நீளம் 24 செ.மீ. அகலம் 16 செ.மீ. உயரம் 4 செ.மீ. கொண்டதாக அமைந்துள்ளது.

12–ஆம் நூற்றாண்டு வரை, சுடுமண்ணால் செய்யப்பட்ட கற்களால் அமைக்கப்பட்ட உறை கேணி மூலம் தண்ணீர் பெறும் மரபே நம்மிடம் இருந்து வந்தது.

பின் 13–ஆம் நூற்றாண்டில், செங்கற்களால் செய்யப்பட்ட கேணிகளை பயன்படுத்தும் நடைமுறை உருவானது.

இங்கு எப்படி கடல் மண் வந்தது என்பது குறித்து அறிய, சிதம்பரம் அண்ணாமலை பல்கலை மண்ணியல் துறை மூலம் ஆராய்ந்த போது 1,300 ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில் சுனாமி எனப்படும் ஆழிப்பேரலை வந்தது தெரிய வந்துள்ளது.

கடந்த 1,300 ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில் கடல் இருந்ததற்கான தடயங்கள் இல்லை. எனவே, இது ஆழிப்பேரலையால் கொண்டு வரப்பட்ட மண் என்பது, ஆய்வின் மூலம் தெரியவந்தது.

### 2500 ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள் தாழி

புதுவையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள ஆரோவில் பகுதியில் ஆராய்ச்சி மேற்கொண்ட போது அங்குள்ள 5 இடங்களில் சுமார் 4 மீ ஆழத்தில் குழிகள் தோண்டியபோது 7 முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்தத் தாழிகள் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இரும்புக்கால மக்களின் தாழிகள் என்பது தெரியவந்தது.

மேலும் அந்த தாழிகளில் இரும்புக்கால மனிதர்களின் ஒரு சில எலும்புகள், அவர்கள் உபயோகப்படுத்திய உலோகத்தினால் ஆன வாள், கத்தி, ஈட்டி, கதிர் அரிவாள், மண் குவளைகள், கல் மணிகள், கண்ணாடி மணிகள் மற்றும் பல்வேறு பொருட்கள் இருப்பதும் தெரியவந்தது.

அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்கள் இறந்த உடன் அவர்களது உடலை ஒரு தாழியில் வைத்து மண்ணில் புதைத்து விடுவர்.

அப்போது அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் உடலுடன் வைத்து புதைப்பது வழக்கம். அவ்வாறு புதைக்கப்பட்ட முதுமக்கள் தாழிதான் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**தொல்லியல் ஆய்வுகள்**

1863–ஆம் ஆண்டு **இராபர்ட் புரூஸ்புட்** என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரத்தில் உள்ள செம்மண் மேட்டுப் பகுதியில் எலும்புகளையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட **முதல் கல்லாயுதம்.**

இந்த கண்டுபிடிப்பிற்கு முன்னரே ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டறிந்தனர்.

**அரிக்கமேடு** அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியருக்கும் தமிழருக்கும் இடையே இருந்த **வணிகத் தொடர்பு** உறுதிப்படுத்தப்பட்டது.

### கீழடி ஆய்வு

சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கிராமம் தற்போது கீழடி எனும் பெயரில் அழைக்கப்பட்டாலும் சங்ககாலத்தில் பெருமணலூர் எனும் பெயரில் அழைக்கப்பட்ட முற்காலப் பாண்டிய நாட்டின் புகழ்பெற்ற பெரிய நகரங்களில் ஒன்றாக இருக்கலாம் என வரலாற்றாளர்களும் தொல்லியலாளர்களும் கருதுகின்றனர். கீழடி எனும் இவ்வூரின் ஒரு பகுதியான பள்ளிச் சந்தைப்புதூரில் சங்ககால மக்கள் வசித்ததற்கான ஏராளமான ஆதாரங்கள் பல்வேறு காலகட்டங்களில் வெளிப்பட்டதால் இவ்வூரின் மேடான பகுதிகளில் ஒன்றான தனியாரின் கட்டுப்பாட்டிலுள்ள தென்னந்தோப்பு ஒன்றில் மத்திய அரசின் தொல்லியல் துறை ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டது.

இவ்வாராய்ச்சிகளில் உறைகிணறுகள், சங்ககால மக்கள் பயன்படுத்திய ஆபரணங்கள் உள்ளிட்ட பல்வேறு சங்ககாலப் பொருட்கள் கண்டறியப்பட்டதுடன், அகழ்வாய்வு நடத்தப்பட்ட பகுதி சங்ககாலத்தில் வைகையாற்றின் கரையாக இருந்திருப்பதற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. ஆனால் தற்போது வைகையாறு இவ்விடத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் ஓடுவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் ஆதிச்சநல்லூருக்கு அடுத்தபடியாக இந்தியத் தொல்லியல் துறையினரால் அகழ்வாராய்ச்சி நடத்தப்படும் இடமான கீழடி பள்ளிச்சந்தையானது சங்க காலத்தில் அழகன்குளம் (தற்போதைய இராமேசுவரத்திற்கருகில் அமைந்திருந்தது) எனும் சங்ககால துறைமுக நகரையும் மதுரையையும் இணைக்கும் பண்டைய வணிகப் பாதையில் அமைந்துள்ளது. தற்போதைய அகழ்வாராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ள புதையுண்ட நகரமானது சங்ககாலத்தில் 120 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கவேண்டும் என்றும் இந்நகரின் இடுகாடானது ஆராய்ச்சி நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கண்மாய்க்கரையில் அமைந்திருந்தற்கு ஆதாரமாக சில முதுமக்களின் தாழிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

வரலாற்றின் தொடக்க காலத்தில் செங்கல் கட்டடச்சான்றுகள் கிடைப்பது மிக அரிதாக உள்ளநிலையில் கீழடி பள்ளிச்சந்தையில் கண்டறியப்பட்டுள்ள அனைத்து வீடுகளின் சுவர்களும் சுமார் 8 கிலோ எடையுள்ள செங்கற்களால் கட்டமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் ரௌலட் (Roulette) மற்றும் அரிட்டைன் (Arretin) வகையைச் சார்ந்த ரோமானிய மட்பாண்டங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளது இப்பகுதி மக்களின் ரோம் நாட்டுடனான தொடர்பை காட்டுகிறது.

மேலும் கொங்குப் பகுதிகளில் அதிக அளவு காணப்படுவதும் கொங்குப் பகுதிகளுக்கே உரித்தான செம்பழுப்பு நிற ஏசட் கலவை பூசப்பட்ட மட்பாண்டங்களும் இங்கு கிடைத்திருப்பது இப்பகுதி மக்கள் கொங்குப் பகுதிகளுடனும் தொடர்பு வைத்திருந்ததைக் காட்டுகிறது. சங்ககாலத்தில் செழிப்பான நாகரிகத்துடனும் சிறப்பான கட்டடக்கலை அமைப்புடனும், ஏராளமான வணிகத் தொடர்புகளுடனும், செழித்து விளங்கிய இப்பகுதி சங்க காலப்பாண்டியர்களின் தொல் நகரான பெருமணலூராகக் கூட இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சங்ககால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்நகரம் மதுரையிலிருந்து தென்கிழக்கே அமைந்திருந்ததாகவும் இங்கிருந்த மக்கள்தாம் கடம்பவனத்தை அழித்து தற்போதைய மதுரையை உருவாக்கினர் என நம்பப்படுகிறது.

தற்போதைய கீழடிதான் சங்ககால பெருமணலூர் என்பதற்கு ஆதாரமில்லையெனினும், கீழடியில் அகழ்வாய்வு மூலம் கண்டறியப்பட்ட நகரமானது நதிப்பெருக்காலோ இதர இயற்கைச் சீற்றங்களாலோ அழியவில்லை என்பது சங்ககால கீழடி மக்கள் இடப்பெயர்ச்சியின் மூலம் இப்பகுதியை விட்டுச்சென்று மதுரையை உருவாக்கியுள்ளனர் எனும் கருத்திற்கு வலுசேர்க்கிறது.

இங்கு நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான் கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு–பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர்முனைகள், தமிழ்–பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக் கிணறுகள், சுடுமண் கூறை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன.

இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள் இறப்பு தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப் பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப் பொருள்களும்



Click Here to Learn more: https://bit.ly/3wH0tud